## தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் இருந்து ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடம் மாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவை முடிவுறுத்திய 59 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 4,595,847 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது 90 உத்தியோகத்தர்களின் கடன் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பதற்கு மிகுதியாக உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 59 ஆகும். | அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளையும் திறைசேரி அச்சிடல் குறிப்பில் காணப்படுகின்ற மீதிகளையும் ஒப்பீடு செய்யும் போது 29 செலவின விடயங்களில் ரூபா 882 முதல் ரூபா 32,943,562 வரையிலான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டது. | சீகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் பொறுப்புக்கள் உள்ளடக்குவதற்கு வழங்கப்பட்ட இறுதி திகதியின் பின்னர் கணக்கு பிரிவிற்கு பொறுப்புக்களாக அனுப்பப்பட்ட பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட போதும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | சகல பொறுப்புக்களும் குறித்துரைத்த திகதியில் திறைசேரிக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 706,952 பெறுமதியான பொறுப்புக்கள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும், தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உறுதிச் சீட்டுக்களில் குறைபாடுகள் மற்றும் கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் இந்த பொறுப்புக்கள் காணப்படுகின்றது. | பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் பேணிச் செல்லப்படுகின்ற 03 வைப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 21,513,909 ஆன வைப்புக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 13 வருடங்கள் தொடர்ச்சியாக கல்விசார் நிகழ்ச்சித் திட்டத்தின் ii கட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது திறன் அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 2,382,541 உரிய பணிகளை நிறைவேற்றாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மேலும் வழங்க வேண்டிய சேவைகளுக்காக எஞ்சிய தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உரிய செயற்பாடுகளை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் (iii) இன் பிரகாரம் காசோலை விநியோகிக்கப்பட்ட திகதியில் இருந்து 06 மாதங்களை விஞ்சியிருந்த கூட்டு மொத்தமான ரூபா 628,626 ஆன 05 காசோலைகள் செலுத்துவதற்குள்ள கடனாக குறிப்பிடுவதற்கு பதிலாக பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | ரூபா 628,626 மீதி எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 தொழில்நுட்ப/ கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் திணைக்கள வங்கி கணக்குகளுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட எனினும், கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 254,619 கூட்டுத்தொகையான 35 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய மீதிகளின் பெறுமதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்கள கணக்குகள் மற்றும் 03 கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு உரிய வங்கிகளுக்குரிய வங்கி இணக்கக் கூற்றுக்களில் 2021 ஆகஸ்ட் முதல் 46 சந்தர்ப்பங்களின் போது கொண்டுவரப்படுகின்ற ரூபா 116,175 ஆன இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இனங்காண்பதை விரைவாக மேற்கொண்டு உரிய கணக்குகளில் கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது டொலர் 7,373 பெறுமதியான தடுப்பு மருந்து ஊசிகள் மற்றும் சிறு குழந்தைகளின் படங்களுடன் பொதியிடப்பட்ட மருந்து வகைகளை உள்ளடக்கிய நுகர்வுப் பொருட்கள் கொரியா கடன் | இந்த செயற்திட்டத்தின் பணிகள் யாவும் திறன் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திறன் அமைச்சில் இருந்து பணிகள் நிறைவேற்றப்பட்ட போதும், தேவை இல்லாதிருக்குமாயின் பொருட்களை |

| | | | |
|---|---|---|---|
| | உதவியின் அடிப்படையில் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றை மிகவும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் ஈடுபடுத்துவதற்கு செயற்திட்ட உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2022 நவம்பர் 28 வரையில் காலாவதியாகி இருந்தது.<br><br>மேலும் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் கணனி ஆய்வு கூடம் 1 மற்றும் 2 இல் கணனி வலையப்பின் மூலம் இணைய வழி கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக ரூபா 8 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட சேர்வர் பங்களிப்பு முறைமை (SERVER SYSTEM) முறையாக அமுல்படுத்தப்படாமையினால் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | நிராகரித்தல் வேண்டும். இந்த பணிகளுக்குரியதாக ஏற்பட்ட சகல நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் 25 இனை விரைவாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் இரத்மலானை தொழில்நுட்ப கல்லூரிக்காக 2020 திசெம்பர் மாதம் ரூபா 295,520 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 03 வகையான பொருட்களில் 77 அலகுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தின் பணிகள் யாவும் திறன் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தேவையின்றி பொருட்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் வழங்குதல் தொடர்பாக கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் கைத்தொழில்/தொழில்நுட்ப கல்லூரிகளில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அந்த பதவிகளில் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து 02 மாதங்களுக்குள் பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும், எந்தவொரு உத்தியோகத்தரிடம் இருந்தும் பிணை வைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள சுற்றறிக்கையொன்று விநியோகிக்கப்படாமையினால் அமைச்சுக்கு தேவையான ஆலோசனைகளை கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிய நடவடிக்கைகள் எடுக்காமல் 2012 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற கூட்டுப் பெறுமதி ரூபா 4,438,909 ஆன இழப்பு மற்றும் நட்டங்கள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. | நட்டம் மற்றும் இழப்பை பதிவழிப்பதற்காக இறுதி கட்டளை பெறப்படாதிருந்ததுடன் கட்டளை பெறப்பட்ட பின்னர் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2012 செப்டம்பர் 27 ஆம் திகத அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் கல்லூரிக்குரிய வேன் வண்டியை ஓட்டிச் சென்ற போது திடீர் விபத்திற்கு உட்பட்டதன் காரணமாக ரூபா 1,047,899 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் ரூபா 327,468 இழப்பீடு மாத்திரம் பணிப்பாளரிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு வரையும் அந்த தொகையை அறவிட்டு அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு பதிலாக ரூபா 1,000,000 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் பதிலழிக்கப்படாத இழப்பு மற்றும் நட்டமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய உத்தியோகத்தர் அமைச்சின் செயலாளருக்கு மேற்கொண்ட கோரிக்கையின் அடிப்படையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு கணக்காய்வு ஐயவினாவில் அவருக்கு செலுத்துவதற்கு நிர்ணயித்த நட்டத்தில் ஏதாவது சதவீதம் ஒன்றை செலுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கட்டளை கிடைத்த உடன் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த விபத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹேமாகம தொழில்நுட்பக் கல்லூரியில் மோட்டார் இயந்திர பாடநெறியை பின்பற்றுகின்ற மாணவர்களின் பிரயோக பயிற்சிகளுக்காக அது சார்ந்த திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் (SSDP) கீழ் Wheel Alignment) உபகரணங்களை பொருத்துவதற்காக கல்லூரி அமைந்துள்ள நிலத்தின் தன்மையை பரீட்சிக்காமல் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 365,204 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாகனங்களுக்கு (Vehicle Pit) நிலக்கீழ் நீர் கசிந்தமையின் காரணமாக மாணவர்களுக்கு பிரயோக பயிற்சியினை மேற்கொள்வதற்கு முடியாமையினால் 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வாகனங்களுக்கு நிலக்கீழ் நீர் கசிந்தமையினால் மீண்டும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் அது தோல்வியடைந்தமையின ால் வாகனங்கள் மூடிவைக்கப்பட்டிருந்தது. | சாத்திய வள ஆய்வை மேற்கொண்டு அரசாங்கத்தின் பணத்தை சிக்கனமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தராதரபத்திரத்தை பூர்த்தி செய்த 04 பாடநெறிகள் மற்றும் 07 தராதரபத்திரமாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் இருந்து கோரப்பட்ட போதிலும், 2022 நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நடாத்திச் செல்லப்படுகின்ற பாடநெறிகளுக்கான தராதரப்பத்திர சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹேமாகம தொழில்நுட்பக் கல்லூரியில் 2021 ஆம் ஆண்டின் போது 15 வெளிவாரி விரிவுரையாளர்களினால் மேவுகை செய்யப்பட்ட மணித்தியால எண்ணிக்கையின் மேவுகை சதவீதம் 5 சதவீதம் முதல் 75 சதவீத்திற்கு இடையிலான வீச்சில் காண்பபட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வெளிவாரி விரிவுரையாளர்களின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக சரியான மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 11 கல்லூரிகளில் பாடநெறிகளை நடத்துதல் தொடர்பான பரீட்சிப்பின் போது 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கல்லூரிகளுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து சென்றமை, பாடநெறிகளை விட்டுச் சென்ற சதவீதம் 25 சதவீதம் முதல் 46 சதவீத்திற்கு இடையிலான உயர் மட்டத்தில் காணப்பட்டமை, சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 75 சதவீதத்தை விட படிப்பாக குறைவடைந்து சென்றமை, பரீட்சைகளுக்கு தோற்றியிருந்த மாணவர்களின் எண்ணிக்கை பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 70 சதவீதத்தை விட குறைவான சந்தர்ப்பம் காணப்பட்டமை. பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்தமை போன்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற செயலாற்றல் மட்டத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 39 கைத்தொழில்/ தொழில்நுட்ப கல்லூரிகள் 39 இல் கற்கைகள் பிரிவில் 780 வெற்றிடங்கள் நீண்ட காலமாக காணப்பட்டதன் காரணமாக பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமை, பரீட்சைகளுக்காக தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை, பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சென்றமை, பாடநெறியை விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, ஊழியச் சந்தைக்கு | பதிலளிக்கப்படவில்லை. | கல்லூரிகளில் காணப்படுகின்ற செயலாற்றல் மட்டத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திறன் வாய்ந்த ஊழியப் படையணியை வழங்குவதற்குரிய இயலுமை வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டன. | | |
| (உ) | திணைக்களத்தில் காணப்படுகின்ற கட்டிடத்தில் இரண்டாவது மாடியில் 07 ஆம் இலக்க விரிவுரை மண்டபம் பல வருட காலம் முதல் நிர்வாக பிரிவின் களஞ்சியமாக பயன்படுத்தப்படுவதுடன்.<br>அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்ட 450 சதுர அடி அளவினை உடைய 02 அறைகள் எந்தவொரு பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | விரிவுரை மண்டப இலக்கம் 07 தேவையான சந்தர்ப்பத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற விடயங்கள் அநேகமானவை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற வளங்களை உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | NVQ Level 05 – Diploma in Food Teacnology பாடநெறியின் Semester 1 இற்குரிய 2022 ஆகஸ்ட் மாத்தில் நடைபெற்ற எழுத்துமூல பரீட்சையில் 90 மாணவர்களுக்காக ஒரு பாடத்திற்காக முன்னைய தினம் நடைபெற்ற பாடத்திற்குரிய வினாப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது, பின்னர் சரியான வினா பத்திரம் பரீட்சை பிரிவின் மூலம் இலத்திரனியல் தபால் (Email) ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>சர்வதேச ரீதியில் உயர்வாக ஏற்றுக்கொள்ள வேண்டிய தொழில்நுட்பக் கல்வி மற்றும் பாடநெறிகளை வழங்குவதில் முன்னுரிமை காண்பிக்க வேண்டிய நடவடிக்கையாக திணைக்களம் கவனமின்மையாக செயற்பட்டதனால் ஏற்படுகின்ற இவ்வாறான சம்பவங்களின் மூலம் பரீட்சைகளின் இரகசிய தன்மை மற்றும் நம்பிக்கையில் அதிக பாதிப்பு ஏற்படுகின்றமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்படுகின்றது. | NVQ 5 – 6 எழுத்து மூல பரீட்சை வருடத்திற்கு நான்கு தடவை நடாத்தப்படுவதுடன், 450 பாடங்கள் அளவிற்குரிய வினாப்பத்திரம் அச்சிடப்படுகின்றமையால் மேற்பார்வையில் தவறுகள் ஏற்பட்டிருந்ததுடன், மீண்டும் இவ்வாறான நலிவுகள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். | பரீட்சைகள் பிரிவின் கடமை நடவடிக்கைகள் உரிய மேற்பார்வையுடனும் இரகசியமாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | திணைக்களத்தில் காணப்படுகின்ற 04 வருடாந்த இடம்மாற்றல் கொள்கைகள் முறையாக அமுல்படுத்தப்படாமையின் காரணமாக 91 உத்தியோகத்தர்களுக்கு பல வருட காலம் முதல் ஒரே இடத்தில் இருக்க வேண்டி ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தமது தனிப்பட்ட வசதியீனத்தின் அடிப்படையிலான கோரிக்கை தொடர்பாக அவர்களுக்கு அனுதாபமான முறையில் கருதி அந்த உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் திணைக்களத்தில் இருக்கின்ற சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டது. | இடம்மாற்றல் கொள்கையின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களம் மற்றும் அதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற தொழில்நுட்ப/ கைத்தொழில் கல்லூரிகளுக்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 51 பதவிகளில் 1599 வெற்றிடங்களும், இரண்டு பதவிகளில் 42 மிகையும் காணப்பட்டது. | அரசாங்கத்தின் சட்டங்கள், விதிகள், கொள்கைகளுக்கு இணங்க எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தற்போது காணப்படுகின்ற மனிதவள முகாமைத்துவம் மூலம் ஆகக் கூடிய வகையில் உரிய சேவைகளை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களுக்காக சரியான திட்ட முறைமையொன்றின் கீழ் ஆட்சேர்ப்பதற்கும், மிகை பதவிகளில் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிறுவனத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |